வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்

## இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் (ஒழுங்குவிதிகள்) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகள் என்பனவற்றின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றிற்குட்பட்டு இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராஜதந்திர ரூபாக் கணக்குகளையும் திறந்து பேணி வருவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

### 1.1 தகைமையுடைய ஆட்கள்

தகைமையுடைய ஆட்கள் ஒழுங்குவிதிகளிலுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

### 1.2 கணக்குகளைத் திறந்து பேணி வருதல்

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவற்றிற்குப் புறம்பாக, இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராஜதந்திர ரூபாக் கணக்குகளையும் திறந்து பேணும் பொழுது பின்வருவனவற்றையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) இராஜதந்திர ரூபாக் கணக்குகளை நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்புக் கணக்குகளாகத் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கான பற்றுக்களையும் வரவுகளையும் காசோலைகளினூடாக மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. எனினும், இராஜதந்திர ரூபாக் கணக்கிலிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேலதிக எடுப்பனவுகளை எடுக்க முடியாது.

(இ) இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு உந்து ஊர்திகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளை வரவு வைக்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு I இல் குறிக்கப்பட்டவாறு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### 1.3 இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்கள்

அனுமதிக்கப்படுகின்ற வரவுகளும் பற்றுக்களும் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

### 1.4 இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்

ஒழுங்குவிதிகளினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்குப் புறம்பாக, இராஜதந்திர ரூபாக் கணக்கிற்குப் பின்வரும் வரவு அனுமதிக்கப்படுகின்றன.

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாக கணக்குடமையாளரின் பெயருக்கு இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட இலங்கை ரூபாவிலான பணவனுப்பல்கள்.

### 1.5 இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க பற்றுக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

2. **இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக**

(அ) **"இராஜதந்திர பணிமனை"** என்பது தூதரகம், உயர் ஸ்தானிகராலயம், காவற்தூதரகம், ஐக்கிய நாடுகள் அல்லது ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு என்பனவற்றின் நிரந்தரப் பணிமனையினைக் குறிக்கும்.

(ஆ) **"இராஜதந்திர ஆளணியினர்"** என்பது இராஜதந்திர பணியகத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வெளிநாடொன்றின் பிரசைகளைக் குறிக்கும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

2017 நவெம்பர் 20

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கு உந்து ஊர்திகளின் விற்பனைப் பெறுகைகளை வரவு வைக்கும் பொழுது பெறப்பட வேண்டிய ஆவணங்கள்**

i. விற்பவரின் பெயரிலுள்ள உந்து ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்.

ii. உந்து ஊர்தியின் உடமை மாற்றல் அறிக்கை - வாங்குநருக்கு மாற்றல் செய்யப்பட்ட உந்து ஊர்தியின் சொத்துடமையினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்று.

iii. உந்து ஊர்தியின் விலையினை உறுதிப்படுத்தி வாங்குநரிடமிருந்து பெற்ற கடிதம்.

iv. அரச நிதித் திணைக்களத்திலிருந்து பெற்ற தீர்வை மதிப்பீடு.

v. உந்து ஊர்தியின் மாற்றலை உறுதிப்படுத்துகின்ற தொடர்பான அமைச்சிலிருந்தான கடிதம்.

vi. சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுங்கத் தீர்வைக் கணிப்பு மற்றும் ஏனைய விதிப்புக்கள்.

vii. சுங்கத் திணைக்களம் - பொருட்களைப் பிரகடனப்படுத்தும் படிவம்.

viii. சுங்கத் திணைக்களத்தின் மதிப்பிட்டு அறிவித்தல்.